Registered as a News paper in Ceylon ★ விலை சதம 10

# ஈழநாடு
EELA NADU

போன் 339 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது தை 3 ... ஷஃபான 30 16-1-64 வியாழக்கிழமை இதழ் 339

**ஈழநாடு**
சந்தா விபரம்
இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

கிழக்கு பாகிஸ்தானில்

# சிறுபான்மையினர் மீது புதிய தாக்குதல்கள்

## துப்பாக்கிப் பிரயோகத்தில் பலர்மாண்டனர்; பலருக்குகாயம்

டாக்கா, ஜன. 15

**கிழக்குப் பாகிஸ்தானில் புதிதாக சிறுபான்மையினர்மீது தாக்குதல் ஆரம்பித்திருப்பதாயும், இதன் விளைவாக பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பலர் கொல்லப்பட்டதாயும், அநேகர் காயமடைந்ததாயும் டாக்கா ரேடியோ அறிவித்திருக்கிறது.**

டாக்காவுக்கருகிலுள்ள நாராயண்கஞ்ச் பகுதியில் தீ வைத்தல், கொள்ளை ஆகியன ஆரம்பித்ததைத் தொடர்ந்து, பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதன் விளைவாகப் பலர் மாண்டனர். மற்றும் பலர் காயமடைந்தனர். அங்குள்ள ஆலைகளுக்கு தீ வைக்க நடைபெற்ற முயற்சியைப் பொலிசார் முறியடித்தனர் என்றும், டாக்காவின் சில பகுதிகளிலும் நாராயண் கஞ்சிலும் 20 மணி நேரம் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாயும் டாக்கா ரேடியோ மேலும் அறிவித்தது.

இன்றைய சம்பவத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. கலகத்தை அடுக்க மேலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுவதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதேசமயம் இன்று காலை கல்கத்தாவில் நிலைமை மாமூலுக்குத் திரும்பியிருப்பதாயும், வாகனப் போக்குவரத்துக்கள் மாமூல்படி நடைபெறுவதாயும் அறிவிக்கப்பட்டது.

"மேற்குவங்கத்தில் காலிகள் நடத்திய வகுப்புக் கலவரத்தை மூர்க்கமாகத் தடுத்துவிட்டோம். இனி கிழக்குப் பாகிஸ்தானில் வகுப்புக் கலவரத்தை அவர்கள் தடுப்பார்கள் என நம்புகிறோம்" என இந்திய உள்நாட்டு மந்திரி திரு. நந்தா கூறினர்.

## பட்டதாரி எழுதுவினைஞர் பட்டகஷ்டம்
### கணக்கு பரிசோதகர் இலாகாவில் சம்பவம்

கொழும்பு, புதன்

கணக்குப் பரிசோதகர் இலாகாவில் கடமையாற்றும் சிங்களம் படிக்காத பட்டதாரி எழுதுவினைஞர் ஒருவர் அண்மையில் ஒரு குறிப்பினைத் தனது மேலதிகாரிக்கு ஆங்கிலத்தில் எழுதி அனுப்பியிருந்தார். ஆனல் மேலதிகாரி, 'குறிப்புகளை சிங்களத்தில் எழுதவேண்டு'மென்று எழுதி திருப்பி அனுப்பிவிட்டார். மிக அவசியமாக அந்த விஷயம் செய்துமுடிக்கவேண்டுமாகையால், எழுதுவினைஞர் தனது சிங்கள நண்பர்களிடம் சொந்த விஷயத்தைப் போல் மன்றாடித் தனது இலாகா விஷயத்தை ஒருவாறு செய்து முடித்தார். அவரது சிங்கள நண்பர்கள் "நீர் பட்டதாரிச் சோதனை பாஸ்பண்ணிவிட்டீர்; ஆனல் சிங்களச் சோதனையை ஏன் எடுக்கவில்லை" யென்று கேட்டார்களாம்.

ஆஸ்திரேலியா - தென்னாபிரிக்கா

## 3 வது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவு

சிட்னி, ஜன. 15

தென்னாபிரிக்காவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே இங்கு நடைபெற்ற 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. ஸ்கோர் விபரம் வருமாறு:-

**தென்னாபிரிக்கா**

1-ம் இன்னிங்ஸ் 302 ரன்கள்.
2-ம் இன்னிங்ஸ் 5 விக்கெட் நஷ்டத்துக்கு 326 ரன்கள்.

**ஆஸ்திரேலியா**

1-ம் இன்னிங்ஸ் 260 ரன்கள்.
2-ம் இன்னிங்ஸ் 9 விக்கெட் நஷ்டத்திற்கு 450 ரன்கள்.

சென்னையில் இங்கிலாந்துக்கும இந்தியாவுக்குமிடையே நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 2-ம் இன்னிங்ஸில், இந்தியா 9 விக்கெட் நஷ்டத்திற்கு 152 ரன்கள் எடுத்து ஆட்டத்தை முடித்துக் கொண்டது.

## அனுதாபக் கூட்டம்

கொழும்பு, புதன்

கலை இலக்கியப் பேரவையின் செயற்குழு, திரு. எஸ். ஜே. குணசேகரத்தின் மறைவு குறித்து ஏகமனதான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

பேரவையின் செயலாளர் திரு. என் இரத்தினசிங்கம், திரு குணசேகரத்தன் மறைவு குறித்துப் பேசுகையில்: அவரது திடீர் மரணம், தமிழ் சமூகத்தற்கே ஒரு பெரும் நஷ்டம், என்றும், அவர் பத்திரிகைகளுக்கு எழுதும் கடிதங்களே அவரது தமிழ்-ஆங்கில அறிவைத் தெளிவுபடுத்துமென்றும், சிலர் அரசியல் தொடர்புகொண்டு செய்யும் சேவையினை திரு. குணசேகரம் தனிமையில் செய்தது பாராட்டுதற்குரிய விடயமென்றும் குறிப்பிட்டார். அனுதாபத் தீர்மானத்தை திரு. குணசேகரத்தின் குடும்பத்தினருக்கு அனுப்பவேண்டும் என்று சபையோர் கேட்டுக்கொண்டனர்.

## அகில இலங்கை சாரணர் போட்டி
### யாழ். இந்துவுக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை சாரணர் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சாரணர்குழு முதலிடத்தைப்பெற்று, "தீவின் சாரணர் தர்மக் கொடியை" சுவீகரித்துள்ளது. இது இக்குழுவினரின் அற்புதமான சாதனையாகும். 24-1-64 வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு சாரணர் தலைமைக் காரியாலயத்தில் நடக்கவிருக்கும் வைபவத்தில் மாட்சிமைதங்கிய மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா விடமிருந்து இக் கொடியை யாழ் இந்து சாரணர்கு குழு அணித் தலைவர்கள் மூவர் பெற்றுக்கொள்வார்கள்.

## போட்டியிலிருந்து விலகுவாரா?

கொழும்பு, புதன்

பொரளை உப-தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீமதி கமலா டி. சில்வாவை போட்டிக்கு நிற்காமல் தடுப்பதற்கு சுதந்திரக்கட்சி நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரியவருகிறது.

நிகவரட்டியாத் தொகுதியில் வெற்றிபெற்ற யு. என். பிக்கு மற்றுமொரு ஸ்தானத்தைக் கொடுத்துவிடக்கூடாதென்பதனால் தான் சுதந்திரக் கட்சி இவ்வித நடவடிக்கையில் இறங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இச்சமயம் ஆளும்கட்சி அங்கத்தவர்களில் பலர் தமது கட்சி ஐக்கியமுன்னணி அபேட்சகர் ஸ்ரீமதி விவியன் குணவர்த்தனவையே ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவிருக்கிறார்கள். ஸ்ரீமதி குணவர்த்தனவை ஆதரிக்கும் எம். பி.க்கள் தமது கருத்தடங்கிய மகஜர் ஒன்றைத் தயாரித்திருப்பதாகவும் அதை பிரதமரிடம் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

திருமதி சில்வா போட்டியிடாவிட்டால்தான் யு. என். பியைத் தோற்கடிக்கமுடியுமென சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

## யாழ். மாநகரசபையின் 1964ம் ஆண்டு முதல் கூட்டம்
### வெள்ளிக்கிழமை நடைபெறும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகரசபையின் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதப் பொதுக்கூட்டம் வருகிற 17-ந் தேதி நடைபெறும்.

விண்ணப்பங்கள், மனுக்கள் முதலிய விஷயங்களும், நிதி, மராமத்து, மின்சாரம், சுகாதாரம் முதலிய குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதுபற்றியும் இக்கூட்டத்தில ஆலோசனை மேற்கொள்ளப்படும்.

16 ஆண்டுகளாக நகரசுத்திக் கங்காணிகளாகக் கடமையாற்றி வருபவர்களுக்கு, கங்காணிகளுக்குரிய வேதனம்

(6-ம் பக்கம் பார்க்க)

BAYER

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுறுணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு
மெற்றசிஸ்ரொக்ஸ்
METASYSTOX
நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்

T'GRAMS ROYAEL ROYAL DISPENSARY PHONE 397 JAFFNA

## மணி வாக்கு

ஒருவர்மீது ஒருவர் செலுத்தும் அன்பு இதயத்தில் ஊறி, உறைந்து விடுமேயானல் அதை அகற்றுவதைப்போல் கடினமானது பிறிதொன்றில்லை.

— ஓர் அறிஞர்

ஈழநாடு
EELA NADU
EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு
தை மீ 3 உ (16-1-64)

## பாக்—இந்திய சம்பவங்கள்

கல்கத்தாவிலும் கிழக்குப் பாகிஸ்தானிலும் சென்ற சில தினங்களாக நடைபெற்று வரும் சம்பவங்கள்பற்றி வெளியாகும் செய்திகள் யாருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கமுடியாது. இரு இடங்களிலும் நிலைமை இப்பொழுது ஓரளவு சீராகியுள்ளதாக செய்திகள் கிடைப்பது ஓரளவு நிம்மதியளிக்கிறதென்றாலும் நிரந்தர சமாதானமும் அமைதியும் இப்பகுதிகளில் ஏற்பட இருநாட்டு அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி, சகலமதத் தலைவர்களும் பொதுமக்களும் முயற்சிசெய்ய வேண்டியது அவசியம் என்பதை இச்சம்பவங்கள் உணர்த்தியுள்ளன.

காஷ்மீரில் யாரோ விஷமிகளின் பொறுப்பற்ற செய்கையால் மசூதியொன்றிலிருந்து புனித கேசம் காணமல்போனதும் அதனல் காஷ்மீரில் இரு பிரிவினருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பு, புனிதகேசம் திரும்பக் கிடைத்ததும் ஓய்ந்தது. ஆனல் இதன் எதிரொலியாக கிழக்குப் பாகிஸ்தானில் இரு சமூகத்தினருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பு பரவியதும் அதன் விளைவு மேற்கு வங்காளத்தில் ஏற்பட்டது. காஷ்மீரில் தக்க தருணத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டதுபோல் கிழக்குப் பாகிஸ்தானிலும் இதர இடங்களிலும் எடுக்கப்பட்டிருந்தால் நிலைமை இவ்வளவு மோசமாகாமல் தடுக்கப்பட்டிருக்கும் என்று கருத இடமுண்டு.

இவ்வித் கலகங்களை பல தடவைகளும் கண்டு, பல உயிர்களையும் பலிகொடுத்த இரு சமூகத்தினரும் இன்னமும் இதுபோன்ற சச்சரவுகளுக்கு இடம்கொடுப்பது பலருக்கும் வேதனையையே கொடுக்கும்.

எந்த மதமும் தீயதைச்செய்யும்படி உபதேசிக்கவில்லை. நல்லதைச் செய்யும்படிதான் அவை கூறுகின்றன. எந்தமதமும் அன்பைத்தான் போதிக்கின்றன. அன்பை வளர்ப்பதற்காக உதயமான மதங்களின் பெயரால் மக்கள் அடிபட்டு உயிர்விடுவது மனித குலத்துக்கே பெருந்தீங்காக முடியும். நவகாளியில் மிக மோசமான கலகம் நடைபெற்றபோது அன்பர்களின் யோசனையையும் மறுத்து துணிந்து சென்று அங்கு அமைதியை நிலைநாட்டினர் மகாத்மா காந்தி. இப்பொழுதும் கிழக்குப் பாகிஸ்தானிலும் மேற்கு வங்காளத்திலும் கலகங்கள் ஓய்ந்து நிலைமை சீரடைந்து வருவதாகச் செய்திகள் கூறினலும் சட்டத்தின் துணைகொண்டு ஏற்படுத்தும் அமைதியை விட அன்பினல் ஏற்படுத்தும் அமைதியே நிரந்தரமாக இடம் பெறும்.

பாகிஸ்தான் ஜனதிபதி பீல்ட்மார்ஷல் அயூப்கான் விடுத்த ஒரு செய்தியில் இக்கலகங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருமாறு கேட்டிருப்பதுடன் சிறுபான்மை மக்களுக்குப் பெரும்பான்மை மக்கள் பாதுகாப்பளிக்கவேண்டுமென்றும் கேட்டுள்ளார். இந்திய மந்திரி கல்கத்தாவுக்கு விரைந்துசென்று நடவடிக்கை எடுத்துள்ளதுடன் பல தலைவர்களும் மக்களை அமைதியாக வாழுமாறு கேட்டுள்ளனர்.

இக்கலகங்கள் மதத்தின் பெயரால் நடைபெற்றுள்ள போதிலும் இருநாடுகளுக்கிடையிலும் உள்ள அரசியல் வேறுபாடுகள்தான் இதற்கு அடிப்படைக் காரணம் என்றும் கருத இடமுண்டு. அரசியல்வாதிகளின் ஆத்திரமூட்டும் பேச்சுக்கள் எத்தகைய விபரீத விளைவுகளை ஏற்படுத்துமென்பதற்கும் இச்சம்பவங்கள் ஒரு உதாரணம். கலகம் வந்து நிலைமை மோசமானதும் மக்களுக்கு அமைதியைப்பேணுமாறு வேண்டுகோள் விடுப்பதைவிட கலகம் தோன்றுவதற்கே இடமில்லாதவகையில் இருநாடுகளிலுமுள்ள அரசியல் தலைவர்களும் நடந்து கொள்ள வேண்டும். கிழக்கு பாகிஸ்தானிலும் மேற்கு வங்காளத்திலும் மதத்தின் பெயரால் மேலும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழலாம். சகல மதத்தலைவர்களும்கூடி நன்முயற்சி செய்யவேண்டியது அவசியம்.

# பருத்திச் செய்கைக்கு வடபகுதியில் நல்வாய்ப்பு

— செ. சண்முகநாதன் —

உணவும், உடையும் மனிதரின் இரு முக்கிய தேவைகள் உணவிற்கு நெல்லரிசியையும், உடைக்குப் பருத்தியையும் நாம் பெருமளவில் உபயோகிக்கிறோம். இன்று நெல்லை நாமே நம் நாட்டில் பெருமளவில் உற்பத்தி செய்ய முயல்கிறோம். இலங்கை அரசினர் காணிகளை வழங்கியும் வேறு பல வகைகளில் உதவியும் நெற்பயிர்ச் செய்கையை அபிவிருத்திசெய்து வருகின்றனர்.

தற்பொழுது இலங்கை அரசாங்கம் அன்னியநாட்டுச் செலாவணியைக் குறைத்து நமது பணம் நம் நாட்டிலேயே இருப்பதற்கு வழிவகைகளைச் செய்துவருகின்றது. இத்திட்டம் ஓரளவு முன்னேற்றமும் அடைந்துள்ளது.

இப்பொழுது துணி விலை அதிகரித்துள்ளது மட்டுமின்றித் துணிகள் கிடைப்பதே அரிது.

வட பகுதியில் பல இடங்களில் பல நெசவுசாலைகள் திறக்கப்போவதாக அறிகிறோம். இப்படிச் செய்வதால் வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவு குறையும். அத்தோடு துணிகளையும் மலிவாகப் பெறலாம். ஆனல் இதற்குத் தேவையான [illegible] நாம் அதிக விலைக்கு பிற நாட்டில் இருந்து பெறவேண்டியிருக்கிறது. நாம் இதை இங்கேயே பெற வழிவகைகளைச் செய்யலாமே. உணவுப் பொருள் உற்பத்தியில் கவனம் செலுத்தும் நாம் உடைக்கான மூலப்பொருளையும் உற்பத்தி செய்யலாகாதா? நிலவளமும் நீர்வளமும் அனுகூலமாயிருக்கும்போது பருத்தியைப் பயிரிட நாம் ஏன் பயப்படவேண்டும்?

பருத்தி, வரண்ட பகுதிகளுக்கு ஏற்ற ஓராண்டுப் பயிராகும். இதற்குத் தேவையானது பரந்து பெய்யும் 24 அங்குல மழைவீழ்ச்சி இது கால போகத்து மழையை நம்பிச் செய்யப்படுகிறது. இதற்கு நீர் வழிந்தோடக்கூடியதும் ஆழமானதுமான தரை தேவை. அதிகம் செழுமையான மண் கூடாது பயிரில் நீர்ச்சத்து அதிகமாகி விளைவு சுருங்கும். இதற்குச் சற்று மேடான செம்மண் தரை சிறந்தது

இலங்கையில் அம்பாந்தோட்டை மாவட்டம் மிகப் பொருத்தமானது. மறறும் வட பகுதியில் மன்னரிலிருந்து துணுக்காய் செல்லும் பாதையில் வெள்ளாங்குளம் என்னுமிடத்திலும் பயிரிடலாம். அங்கு விவசாய இலாகாவினர் பருத்தி பரிசீலனை நிலையம் ஒன்று அமைத்து இம்முறை 50 ஏக்கர் பயிரிடப்போகிறார்கள். சென்ற ஆண்டு சேனைவாக (காடழித்து) 25 ஏக்கர் பயிரிட்டனர். இதன் விளைவு திருப்திகரமானதாக இருந்தது.

தற்பொழுது பருத்தியில் சிறந்த வர்க்கம் ஏச். சி. 101 என்பதாம். இதை நாம் விவசாய இலாகாவினரிடம் பெறலாம். மேலும் சிறந்த வர்க்கத்தைக் கண்டுபிடிக்க மாலுவிப்பலாமா ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் சாதகமான பயன் கிட்டும்.

பருத்தி செப்டம்பர் பிற்கூற்றில் அல்லது அக்டோபர் முற்கூற்றில் நாட்டப்படுகிறது. முதல் மழையோடு பருவத்தே பயிர்செய்யின் பயன் கூடும். நிலத்தை நன்றாகப் பண்படுத்தி அடிக்கட்டாக ஒரு ஏக்கருக்கு 3—5 தொன் மாட்டெரு அல்லது கூட்டெரு பெய்தால விளைவு கூடும். அதாவது 10 அந்தர் விளைகிறது. இதை 3' X 2' என்ற இடைவெளியில் 4—5 வித்துக்கள் நாட்ட 10 ருத்தல் வித்து தேவை -ஒரு ஏக்கருக்கு. வித்திடும் கருவியைப் பயன்படுத்தலாம்.

மழை பெய்ய வித்து ஒரு வாரத்தில் முளைக்கும். முளைத்து இரண்டு வாரங்களின் பின் களைகட்டி நிலையத்தில் இரண்டு கன்றுகள் விட்டு இடைவெளிப்படுத்தவேண்டும். பின்னும் 3—4 வாரத்தால் களைகட்டலாம்.

விதைத்து மூன்றரை மாதங்களால் பஞ்செடுக்கத் தொடங்கி இரண்டு கிழமைக்கு ஒருதடவையாக 5-ம் மாதம்வரை அறுவடைசெய்யலாம். பூரணமாக விரிந்த உறையங்களிலிருந்து மட்டும் பஞ்சு எடுத்தல்வேண்டும்; நன்கு விரியாத உறையத்திலிருந்து எடுக்கப்பட்ட பஞ்சு தரம் குன்றியதாகும். இப்படியாக அறுவடை செய்யப்பட்ட பஞ்சைச் சேகரித்து வித்தகற்றாத பஞ்சை வெய்யிலில் காயவைக்கவேண்டும்.

பின்பு துப்புரவான தூய வெண்ணிறப் பஞ்சை முதலாந்தரத்தினதாகவும், சுருண்டு பூச்சிகள் நசுங்கி மங்கிய நிறமடைந்த பஞ்சை இரண்டாந்தரத்தினதாகவும், அழுக்கடைந்த துண்டுதுணுக்குப் பஞ்சை மூன்றாந் தரத்தினதாகவும், தினுசுப்படுத்துதல் வேண்டும்.

## சூதாடினர் மாஜி மேயர்

சென்னை, ஜன. 15

சூதாடியதாக முன்னுள் சென்னை மேயர் திரு. எம். எஸ். அப்துல்காதர் உட்பட 18 பேர் கைதுசெய்யப்பட்டனர். சூதாட்டச் சாமன்கள், ரொக்கம் ஆகியவற்றை சோதனையின்போது. பொலிசார் பறிமுதல்செய்தனர். இவற்றின் மதிப்பு ரூபா 198. கைதானவர்கள் அனைவரும் பின்பு ஜாமினில் விடுதலை செய்யப்பட்டனர்.

கொழும்புக் கடிதம்

# சிறிமாவோ கேட்ட தமிழ்க்குரல்!

## வடக்கு, கிழக்கு வைத்த பொறி வலியவந்து விழும் விந்தை

— கொழும்பு நிருபர் —

"யு என் பிக்கு நிர்கவரட்டியா" என்ற தலையங்கத்துடன் சென்றவாரம் கொழும்புக்கடிதத்தை எழுதியிருந்தேன். அதேபோல யு. என் பி. அங்கு வெற்றி வெற்றிபெற்றிருக்கிறது.

பற்றுக்குறையும் பஞ்சமும் நாட்டில் மலிந்திருப்பதனல் சுதந்திரக்கட்சியை மக்கள் எதிர்ப்பதாகவும் எழுதியிருந்தேன். இப்போது எழுத்தளவில் மாத்திரம் அந்தக் கூற்று நின்றுவிடாமல் நிதர்சனமாக்கப்பட்டுவிட்டது.

வாடிவதங்கும் வயிற்றுக்கு உணவு, மானத்தைக்காக்க உடை, ஒதுங்கக் குடிசை இவை மூன்றும் அத்தியாவசியமானவை. இந்த மூன்றில் ஒன்றாவது திருப்திகரமான முறையில் இல்லை. பார்க்கப்போனல் "இல்லை" என்கிற சொல்லுத்தானும் மிஞ்சியிருக்குமோ தெரியாது. நிலைமை இவ்விதம் மோசமடைந்திருப்பதை வாழ்க்கைச் செலவுப் புள்ளி நாளுக்குநாள் விஷம்போல் ஏறி இப்போது 110 விகிதத்தையும் தாண்டிவிட்ட பின்னர்தான் ஆளும் (ஆமும் அல்ல) கட்சியினர் உணரத் தொடங்கியுள்ளார்கள்.

செவ்வாயன்று நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் இதைப் பற்றித்தான் வாய்ச்சண்டை நடந்திருக்கிறது. ஏற்கெனவே பலமிழந்துவிட்ட அரசாங்கக் கட்சியினர் அதனல் ஏற்படக்கூடிய கஷ்டநஷ்டத்தைப் பாராமல் நிலைமையைச் சமாளிக்க முடியாவிட்டால் மந்திரிசபை ராஜினமாச் செய்துவிட வேண்டுமென்று கோஷித்துள்ளார்கள். மந்திரிசபை ராஜினமாவென்றால் பார்லிமெண்ட கலைக்கப்பட்டுபின்னர்பொதுத் தேர்தலும் நடைபெற்றாக வேண்டும்!

நிக்கவரட்டியாவில் இரண்டாவது ஸ்தானத்தைககூட கைப்பற்ற முடியாமல்போன சுதந்திரக்கட்சி "தற்கொலை செய்ய விரும்புமா!" என்று சிலர் கேள்விகுறி போடுகிறார்கள், எது எப்படிப்போனலென்ன. பொதுநலனைக் கவனிக்கத் தவறும்பட்சத்தில் பதவிகளிலிருந்தும் பிரயோசனம் ஏற்படாதெனக் கருதுபவர்களும் இல்லாமலில்லை.

உதவிநிதிமந்திரியாகவிருந்த திரு. ஜார்ஜ் ராஜபக்ஸவும் அவரது கோஷ்டியினரும் சர்க்கார் கட்சிக்குள ஒருபலம் வாய்ந்த சக்தியாக இருக்கிறார்கள். துறைமுக வேலைநிறுத்தம் சம்பந்தமாகப் பேசுகையில் சர்க்கார் கட்சியின்மீது தனக்குள்ள அதிருப்தியை சர்க்கார் கட்சியின் முன்னுள் கொறடா திரு. ஜே. டி. வீரசேகரா அம்பலமாககினர். இப்படி கட்சியிலிருந்தபடியே அதை எதிர்ப்பவர்கள் தினேதினே அதிகரித்துக கொண்டுவருகிறார்கள்.

இவைகளையெல்லாம் அவதாணிப்பவர்கள் 'அடுத்தது என்ன?' என்றே எதிர்பாத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### எருதுக்கும் கோபம் முடவனுக்கும் கோபம்

'ஏறச்சொன்னல் எருதுக்கும்கோபம்; இறங்கச் சொன்னல் முடவனுக்குக கோபம்' என்று ஒரு முதுமொழியுண்டல்லவா? அதேபோன்ற நிலைமை செவ்வாயன்று துறைமுகவேலைநிறுத்தம் சம்பந்தமாக நடைபெற்ற மந்திரிசபையின் விசேஷகூட்டத்தில் நிலவியதாக நம்பிக்கையான வட்டாரங்கள் கூறுகின்றன.

'போத்தல் துரை' என்று வர்ணிக்கப்படும் மந்திரி ஒருவர் துறைமுகப்பகுதியில் அவசரகாலச் சட்டத்தை அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டாராம். ஆனல் அதற்கு முழுமூச்சாக எதிர்ப்புத் தெரிவித்த மற்றொரு மந்திரி அப்படியானல் தாம் ராஜினமாச் செய்யப்போவதாக அறிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த மந்திரிசபைக்கூட்டத்தில் என்ன நடந்ததென்பதைப்பற்றி இக்கடிதத்தைப் படிக்கும்போதே நீங்கள் அறியக்கூடியதாகவிருந்தாலும் இருக்கலாம். ஆனல் ஒன்று. அவாரகாலச்சட்டம் அமுல் நடத்துவதை எதிர்த்தமந்திரி ராஜினமாக்கடிதத்துடன்தான் அன்றிரவு நடைபெற்றமந்திரிசபையின் அவசரக்கூட்டத்துக்கு சென்றிருந்தாராம். அக்கடிதத்தை உபயோகிக்கவேண்டிய சந்தர்ப்பமே எழவில்லைப் போயிருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதுவும் குறிப்பிட்ட இடங்களில் அவசரகாலச் சட்டத்தை அமுல் நடத்துவதற்காகத்தான் பொதுஜன பாதுகாப்புச் சட்டத்துக்கு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அந்த நேரத்தில் அதை எதிர்க்கட்சிகளும் சேர்ந்து எதிர்க்கையில் இப்படியான அபாயம் வருமென சுட்டிக்காட்டினர் ஆனல் இதே சர்க்கார் கட்சியினர் அதை ஏற்காது திருத்தத்துக்கு வாக்களித்தனர். இன்றோ அவர்களே எதிர்க்கிறார்கள், வளர்த்த கடா மார்பில் பாயும்போதுதான் அபாயம் புலனகிறது. இன்னும் என்ன நடக்கவிருக்கிறதோ!

### பிரதமமந்திரியும் தமிழ்ப்பேச்சும்

பிரதமமந்திரி சிறிமாவோ தமிழ்ப் பேச்சொன்றை கண்ணுங் கருத்துமாக சுமார் 40 நிமிடநேரம் வரையில் கேட்டுக் கொண்டிருந்தாரென்றால் நம்புவீர்களா? உண்மையாக இது செனட்சபையில் செவ்வாய்க்கிழமை நடந்தது.

வெளிநாட்டுக் கொள்கை மீது நம்பிக்கையில்லையென்று தெரிவிக்கும் பிரேரணைமீது செவ்வாயன்று நடைபெற்ற விவாதத்தின்போது செனட்டர் மாணிக்கம் தமிழில்தான் பேசினர். இப்பேச்சு வழமைபோல ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டன. பிரதமரோ பேச்சை சிரத்தையுடன் அவதானித்து வந்ததுடன் இடையில் குறுக்கிட்டு அரசாங்கத்தின் கொள்கையை விளக்கினர்.

செனட்சபையில் தமிழில் பேசுவதற்கு, முன்னர் செனட்டர் நல்லையா இருந்தார். இப்போது அவரது பங்கையும் சேர்த்து மாணிக்கம் நிறைவேற்றுகிறார்.

இங்குமாத்திரம்தான் பிரதமர் தமிழ்க்குரலை கேட்கக்கூடியதாகவிருப்பதனலோ என்னவோ செனட்டர் மாணிக்கம் பேசுகையில் "எனக்குச் சுகவீனம். அப்படியிருந்தும் நான் விவாதத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே வந்தேன்" என்று கூறினர்.

# கல்கத்தாவில் கலவர நிலைமை

# ஒடுங்கி வருகிறது

# எல்லா இடங்களிலும் ஊரடங்கு சட்டம் தளர்த்தப் பட்டது

## துப்பாக்கிப் பிரயோகத்தில் 150 க்குமேல்பலி; 7,000க்கு மேல்கைது

புதுடில்லி, ஜன. 15

கல்கத்தாவிலும், மேற்குவங்காளத்தின் இதரபகுதிகளிலும் நிலைமை இப்போது பெரிதும் சீரடைந்திருப்பதாயும், ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டிருப்பதாயும் உள்நாட்டு மந்திரி திரு. குல்ஸாரிலால்நந்தா தெரிவித்தார். மேற்கு வங்கத்தில் பொலிஸ், ராணுவ துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாக 150க்கு மேலானோர் மாண்டனர் என்றும், 7000க்கு மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டதாயும், கல்கத்தாவில் மட்டும் 4000க்கு மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டதாயும் அவர் தெரிவித்தார்.

திரு. நந்தா கலகப்பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு நேற்று புதுடில்லி திரும்பினார். [illegible] மேற்கொண்டு பொலிசார் அனுப்பப்பட்டிருப்பதாயும் மந்திரி தெரிவித்தார்.

கல்கத்தாவிலும் இதர கலகப்பகுதிகளிலும பல இனமக்களும் இப்போது ஒற்றுமை உணர்ச்சியைக் காட்ட ஆரம்பித்திருப்பதாயும் மைனாரிட்டிகள் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாயும், சிறுபான்மையினரைப் பாதுகாக்க பெரும்பான்மை மக்கள் தமக்கு அளித்த ஒத்துழைப்பு இதயத்தைத் தொடுவதாய் இருந்ததென்றும்நந்தா அறிவித்தார். கலகத்தினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உணவு, தங்குமிடம், மருந்துப் பொருட்கள் ஆகிய வசதிகளுக்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்றும் திரு நந்தா தெரிவித்தார்.

"கலகம் செய்யும் விஷமிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்" என எச்சரித்த மந்திரி எல்லா வகுப்பு மக்களுக்கும் பூரண பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

"கிழக்கு பாகிஸ்தானில் என்ன நடந்தபோதிலும் நம்மைப் பொறுத்தவரை நாம் நாகரிக சமூகமாய் நடந்துகொள்ள வேண்டும். கலகக்காரர்கள் ஒடுக்கப்படுவார்கள். பாகிஸ்தானில் ஒவ்வொரு அம்சத்துக்கும் வகுப்புவாதம் கற்பிக்கப்படுகிறது. ஆனால் வெளியில் நடப்பதை நாமும் பின்பற்றக்கூடாது" என்றும் திரு. நந்தா தெரிவித்தார்.

கலகப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருக்கிறது. மாலை 5 மணிமுதல் காலை 7 மணிவரை மட்டுமே இனி அங்கு ஊரடங்குச்சட்டம் அமுலாகும். கல்கத்தாவில் போக்குவரத்துக்கள் மாமூலுக்கு வந்து கொண்டிருக்கின்றன. 8 பொலிஸ் பகுதிகளில் ராணுவம் செயலாற்றி வருகிறது.

இதற்கிடையில் டில்லியிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனர் இந்திய காமன்வெல்த் காரியதரிசியைச் சந்தித்து மேற்குவங்கத்திலும் கிழக்கு பாகிஸ்தானிலும் ஏற்பட்ட கலவரம்பற்றி விவாதித்தார். அதேசமயம் கிழக்கு பாகிஸ்தானில் புதிதாகச் சில இடங்களில் கலகம் தோன்றியிருப்பதாயும் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாக ஒருவர் கொல்லப்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

# காமராஜ் நாளை டில்லி புறப்படுகிறார்

## மத்திய அரசாங்கத்தை நடத்துவது பற்றி ஆலோசனை செய்வார்

சென்னை, ஜன. 15

பிரதம மந்திரி நேருவுக்கு இரத்த அழுத்தம் குறைந்துள்ளபோதிலும், அவர் குறைந்தபட்சம் ஒரு மாத காலத்திற்காவது உள்ளம், உடல் ஆகிய இருவகையிலும் ஓய்வெடுத்துக்கொள்வது அவசியம் என காங்கிரஸ் அக்ராசனர் திரு. காமராஜ் கூறினார்.

புவனேஸ்வரத்திலிருந்து டில்லிக்குப் புறப்படும்போது, நேரு நன்றாக இருந்ததாயும், உட்கார்ந்துகொண்டு நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்ததாயும் அவர் கூறினார்.

"கல்கத்தா கலவரங்கள் நேருவுக்கு அதிக கவலையைத் தரும் என்பது நிச்சயம். ஆனால் இக்கவலைதரும் செய்தியை எவ்வளவு காலம் அவருக்குத் தெரியாமல் வைத்திருக்க முடியும்" என்றும் காமராஜ் குறிப்பிட்டார்.

ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி மீண்டும் மத்திய மந்திரிசபையில் இடம் பெறலாம் என்ற வதந்தி குறித்து ஒரு நிருபர் கேட்டதற்கு "தமக்குத் தெரியாது" என காமராஜ் பதிலளித்தார்.

ஸ்ரீ காமராஜ் நாளை டில்லிக்கு வந்து ஒரு வாரகாலம் தங்குவார். பிரதமர் நேரு சில வாரங்களுக்கு ஓய்வெடுத்துக் கொண்டிருக்கையில், அரசாங்கத்தை நடத்துவது சம்பந்தமாகச் செய்யவேண்டிய ஏற்பாடுகள்பற்றி அவர் நேருவையும், சீனியர் காங்கிரஸ் தலைவர்களையும் கலந்தாலோசிப்பார் எனக் கூறப்படுகிறது.

பிரதமர் நேருவின் உடல்நிலை சுகமடையவேண்டுமென விரும்புவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன், ஜப்பானிய பிரதமர் இக்கேடா ஆகியோர் செய்தி அனுப்பியிருக்கின்றனர். இந்தியாவிலுள்ள அந்நியத் தூதர்கள், கவர்னர்கள், முதன் மந்திரிகள், எல்லாத் தரப்பு மக்கள், வெளிநாடுகள் ஆகிய வட்டாரங்களிலிருந்து அவருக்குச் செய்திகள் வந்திருக்கின்றன

தங்கள் ஆயுளில் பல வருடங்களை எடுத்துக்கொண்டு அதைப் பிரதமருக்கு அளிக்குமாறு தாங்கள் பிரார்த்திப்பதாகப் பல இளைஞர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

பிரதமர் துரிதமாகக் குணமடைய கோவில்களிலும், மாதா கோவில்களிலும், மசூதிகளிலும் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன. திருப்பதிபோன்ற புனித க்ஷேத்திரங்களிலிருந்து பிரசாதங்கள் அனுப்பப்பட்டன.

பிரதமருக்கு "எக்ஸ்ரே" எடுக்கப்பட்டு இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டதாயும், அதில் அசாதாரணம் எதுவும் இல்லையென்றும் அறிவிக்கப்பட்டது.

நிதி மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அயல்நாட்டிலாகாவுக்குச் சென்று முக்கிய அலுவல்களைக் கவனித்தார். வாஷிங்டனில் பணியாற்றும் தூதர் திரு. பி. கே. நேரு டி. டி. கே. யுடன் நீண்ட நேரம் பேசினார். யு. எஸ். உதவி உட்பட இரு தேச உறவுபற்றியும் அவர்கள் விவாதித்தனர். ஐரோப்பிய பொது மார்க்கெட்டுடன் தொடர்பு கொண்டுள்ள இந்தியப் பிரதிநிதி திரு. கே. பி. லாலும் டி. டி. கே. யைச் சந்தித்தார்.

# மனக்கோளாறால் அதிகம் பாதிக்கப்படுவது பிரம்மச்சாரிகள்

லண்டன், ஜன. 15

மணவாழ்க்கையால் மனக்கஷ்டங்கள் ஏற்படுவதாகக் கூறப்பட்டாலும்கூட, ஆண் அல்லது பெண் தனிமை வாழ்க்கை நடத்தாமல் மணம் செய்துகொள்வதானது அவர்களுக்கு மனக்கோளாறு ஏற்படாமல் ஓரளவு பாதுகாக்கிறதாம்.

ஆஸ்பத்திரியில் மனக்கோளாறு சம்பந்தமாக அனுமதிக்கப்பட்ட 90 ஆயிரம் நோயாளிகளைப்பற்றி ஆராய்ந்ததில் இக்கருத்து ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. 1954, 55-ம் ஆண்டுகளில் முதல்தடவையாக அனுமதிக்கப்பட்ட நோயாளிகளைப்பற்றி இந்த ஆராய்வு மேற்கொள்ளப்பட்டது.

மனக்கோளாறு காரணமாக அதிக விகிதத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள் ஒண்டிக்கட்டையான ஆண்களே. இதற்கு அடுத்தபடியாக அனுமதிக்கப்பட்டவர்கள் ஒண்டிக்கட்டையான பெண்கள்.

மிகக்குறைந்த விகிதத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள் இல்லறவாழ்க்கை நடத்தும், அல்லது நடத்திவந்த ஆண்களேயாகும். தவிர இல்லறவாழ்க்கை நடத்தும் அல்லது நடத்தியவர்கள் குறைந்தகாலம்தான் ஆஸ்பத்திரிகளில் இருக்கவேண்டியிருந்தது.

# போப்பாண்டவர் இந்தியவிஜயம்: இன்னும் முடிவாகவில்லை

வத்திக்கான், ஜன. 15

இவ்வாண்டு நவம்பர் மாதம் பம்பாயில் நடைபெறவிருக்கும் ரோமன் கத்தோலிக்க மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியா செல்வதா என்பது குறித்து பாப்பாண்டவர் போல், இதுவரை முடிவு எதுவும் செய்யவில்லை என ஆதார பூர்வமான வத்திக்கான் வட்டாரங்கள் கூறின.

இம்மாத ஆரம்பத்தில் இயேசுநாதர் அவதரித்த புனித பூமிக்கு யாத்திரையை மேற்கொள்ளும் முன்பே, இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனிடமிருந்து வந்த உத்தியோக பூர்வ அழைப்பை பாப்பாண்டவர் இன்னும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்.

புனித யாத்திரையை மேற்கொள்வதற்கு முன்னதாக அதைப்பற்றி பாப்பாண்டவர் நீண்ட காலம் ஆலோசனை நடத்தியதை ஆதார பூர்வமான வட்டாரங்கள் நினைவுறுத்துகின்றன. யாத்திரையைப் பற்றி ஒரு மாதத்துக்கு முன்புதான் அவர் அறிவித்தார். 10 மாதங்களுக்கு முன்னதாகவே இந்திய விஜயம் சம்பந்தமாகி பாப்பாண்டவர் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வது சாத்தியமில்லை எனவும் வத்திக்கான் வட்டாரங்கள் கூறின.

பாப்பாண்டவரின் புனித யாத்திரை, மேற்கொண்டு வெளிநாட்டு சுற்றுப்பிரயாணத்துக்கு வழி கோலியிருக்கிறது என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

பம்பாய்க்கு அவர் விஜயம் செய்வது சாத்தியம் என்றும் கருதப்படுகிறது. பம்பாய் ஆர்ச் பிஷப்புடன் நடத்திய சம்பாஷணையின் போது கத்தோலிக்க மகாநாடு பற்றி அவர் சிரத்தை தெரிவித்தார்.

அதே சமயம் பாப்பாண்டவர் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யக்கூடும் என்ற செய்தி பற்றி இங்கு அவநம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது. சமய முக்கியத்துவம் இருந்தால்தான் அவர் சாதாரணமாக சுற்றுப்பிரயாணம் மேற்கொள்வதுண்டு.

---

# கொழும்புதிட்டத்தில் இந்தியப் பங்கு

புதுடில்லி, ஜன. 15

கொழும்புத திட்டத்தின் கீழ், ஆசிய ஆபிரிக்க நாடுகளிலேயே இந்தியா தான் அதிக உதவி அளித்திருப்பதாகக் கூறப்படுகிறது. நேபாளத்துக்கு மட்டும் 2 கோடி ரூபாய்க்கு மேல் உதவியளிக்கப்பட்டிருக்கிறது. 150 இந்திய தொழில்நுட்ப நிபுணர்கள் அங்கு பல அலுவல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். வேறு 10 நாடுகளுக்கு இந்தியா பல வகையில் உதவியளித்துவருகிறது.

---

# விவசாயத்துக்கு ரூ. 150 கோடி

புதுடில்லி, ஜன. 15

1964-ம் ஆண்டில் விவசாயத்துக்காக ரூ 150 கோடியை திட்டக்கமிஷன் ஒதுக்கியிருக்கிறது.

# ஸான்ஸிபார் சுல்தானுக்கு தங்கனீகா புகலிடம்

## புதிதாக கலக சம்பவங்கள்

லண்டன், ஜன. 15

ஸான்ஸிபார் சுல்தானுக்கு கென்யா புகலிடம் அளிக்க மறுத்துவிட்டதென்றும், தங்கனீகா அவருக்குப் புகலிடம் அளித்திருக்கிறதென்றும் அறிவிக்கப்படுகிறது.

ஸான்ஸிபாரில் புதிதாகக் கைகலப்பு நிகழ்ந்திருப்பதாயும், பல இடங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கைகலப்பில் 80க்கு மேலானோர் கொல்லப்பட்டதாயும், 500க்கு மேலானோர் காயமடைந்ததாயும் அறிவிக்கப்பட்டது.

# பிரிட்டிஷ் – இந்தோனேஷிய கைகலப்பு பற்றி யு.எஸ். கவலை

## சுகர்ணோவுடன் பேச ராபர்ட் கென்னடி வருகை

வாஷிங்டன், ஜன 15

வட போர்னியோ பகுதியில் பிரிட்டிஷ் குருப்புகளுக்கும் இந்தோனேஷிய கொரில்லாக்களுக்குமிடையே நடைபெற்ற கைகலப்புப்பற்றி அமெரிக்கா கவலையடைந்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ஜோன்ஸனின் விசேஷ பிரதிநிதியாக அமெரிக்க அட்டோர்னி ஜெனரல் திரு ராபர்ட் கென்னடி டோக்கியோவுக்குப் புறப்பட்டிருக்கிறார். அங்கு ஜனாதிபதி சுகர்ணோவை அவர் கண்டு பேசுவார்.

## யு. எஸ். ஜனத்தொகை

நியூயோர்க், ஜன. 15

புதுவருடதினத்தன்று அமெரிக்காவின் ஜனத்தொகை 19,06,95,000. எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்திலும் அமெரிக்காவின் ஜனத்தொகை எவ்வளவு என்பதைக் கணக்கிட்டுச் சொல்லிவிடும் கணக்கீடு யந்திரத்தின் மூலம் இத்தகவல் பெறப்பட்டுள்ளது.

## அராபியத் தலைவர்கள் மகாநாடு

கெய்ரோ, ஜன. 15

ஜோர்டான் நதி பற்றி அராபிய நாடுகளின் உச்சிமகாநாடு நேற்று ஆரம்பமாகியது. ஜனாதிபதி நாஸர் மகாநாட்டுக்கு வெளியிலும் பல அராபியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசியதாகக் கூறப்பட்டது.

யாழ்ப்பாண

# சுகாதார சேவை தொழிலாளரின் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன் சுகாதாரசேவைத் தொழிலாளர் ரூபா 500 முற்பணமாகச் செலுத்தியும் 40 ரூபாவோ 50 ரூபாவோ மாத வாடகைப் பணமாகச் செலுத்தியும் குடியிருப்பதற்கு வீடு எடுக்க வேண்டியிருப்பதால் சுகாதார இலாகா குடியிருப்புக்கு விடுதி வசதிகள் அளிக்கவேண்டும். அல்லது காணி வாங்கி வீடுகட்டுவதற்கு திறைசேரியிலிருந்து கடன் பெறக்கூடிய வகை செய்துதரவேண்டுமென யாழ்ப்பாண சுகாதாரசேவைத் தொழிலாளர் சுகாதாரசேவை டைரக்டரைக் கோரியுள்ளனர்.

சுகாதாரசேவை டைரக்டர் சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோதே இவ்வித கோரிக்கை அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சுகாதார சேவைத் தொழிலாளர்சங்கம் சுகாதாரசேவை டைரக்டரிடம் சமர்ப்பித்த மகஜரில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாண மாவட்ட எல்லைக்குள்ளிருக்கும் சிறு சேவையாளருக்கு 8 மணிநேர வேலையே வழங்கப்படவேண்டும்.

மார்புநோய் சிகிச்சை நிலையத்தில் கங்காணிமார் செய்யும் வேலைகளை கூலியாட்களிடம் ஒப்படைக்கத் திட்டமிட்டுள்ளதைச் சங்கம் ஆட்சேபிக்கிறது.

தமிழ் ஊழியர்கள் நியமனம் செய்யும்போது தமிழில் நியமன உத்தரவாதக் கடிதங்களை வழங்குமாறு சங்கம் கேட்டுக்கொள்கிறது.

ஆஸ்பத்திரிக் காவலர்கள் மழையிலும் கடமையாற்ற வேண்டியிருப்பதால் அவர்களுக்கு மழைக் கோர்ட்டுகள் வழங்கப்பட வேண்டும் என்றும்சங்கம் கோரியுள்ளது.

# "பல்கலைக்கழக கமிஷன் உறுப்பினர்களுக்கு சிங்களம் தெரியாது"

## தேரோ கண்டனம்

செங்கடகலை, புதன்

"அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பல்கலைக்கழகக் கமிஷனில் கடமையாற்றும் மூவருக்கும் சிங்கள மொழியை எழுதவோ, படிக்கவோ தெரியாது. அரசாங்கத்தின் கருத்தற்ற செயல்களில் இதுவும் ஒன்றாகும்."

பேராதனை பல்கலைக்கழகத்தின் சிங்கள சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வண. பம்பரன்டே சிறி சிவாலி பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ஜலவிமல அமரசேகரா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சிறி சிவாலி தொடர்ந்து பேசியதாவது:

'மூன்றுபல்கலைக்கழகங்களில் இரண்டு முற்றிலும் சிங்களத்தில் நடைபெறுபவை. இம் மூன்று பல்கலைக்கழகங்களின் வேலைகள் பற்றி விசாரணை செய்வதற்காகவே அரசாங்கம் இக்கமிஷனை நியமித்தது. இக் கமிஷனிலுள்ள மூன்று அங்கத்தவர்களும் வித்தியாலங்கார பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்தபொழுது, தங்களுக்கு சிங்களமொழி தெரியாதென்பதைக் காட்டிக்கொண்டார்கள். கமிஷன் விசாரணையின்போது மூவரும் சிங்களம் படிக்கத் தெரியாது கஷ்டப்பட்டனர்.

சிங்களப் பத்திரிகைகளில் வந்த செய்திகளை, சேகரித்து அவர்களிடம் கொடுத்த பொழுது, தங்களுக்கு சிங்களம் தெரியாதெனக் கூறினர்கள். அப்பத்திரிகைச் செய்திகளில் வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தைப் பற்றிய முக்கிய செய்திகள் இருந்தன தங்களின் வீட்டில் கூட சிங்களம் படிக்கத் தெரிந்தவர்கள் இல்லையென்றும், எல்லோருக்கும் ஆங்கிலம் மட்டுமே தெரியுமென்றும், அதனால் இப்பத்திரிகைச் செய்திகளை படித்துக்கொள்ள முடியாதென்றும் அவர்கள் பல்கலைக் கழக மேலதிகாரிகளிடம் தெரிவித்தார்கள்.

பல்கலைக்கழகக் கமிஷனில் கடமையாற்றும் அங்கத்தவர்கள் ஒரு பிற்போக்கான அறிக்கையைத் தயாரித்துள்ளார்கள். இவர்களின் சிபார்சு நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒரு அழிவை உண்டாக்கக் கூடி[illegible] அந்த அறிக்கை யி[illegible]ப்பட்டுள்ள அரசி ய[illegible] மக்களுக்காகமுன் வி[illegible]ட்டவர்கள் மட்டு[illegible] ஆண்டு முதல் 19[illegible] ஆண்டு வரை சிங்களம் மட்டும் உத்தியோக மொழியாக வேண்டுமென்று பாடுபட்டவர்கள்.

# பாராட்டு, வரவேற்பு விழா

கொடிகாமம், புதன்

தென்மராட்சி காரியாதிகாரியாகவிருந்து யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகிச் சென்ற திரு. சிவஞானத்தின் சேவை நலனைப் பாராட்டவும், புதிய தென்மராட்சிப்பகுதிக் காரியாதிகாரி திரு. ஆர். சிதம்பரப்பிள்ளையை வரவேற்கவும், இம் மாதம் 18-ந்திகதி சனிக்கிழமை மீசாலை வடக்கு வீரசிங்கம் வித்தியாசாலையில் ஒருகூட்டம் நடைபெறும். திரு. மு சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், திருவாளர்கள இராஜ அரியரத்தினம், பேரம்பலம் செல்லையா க. மயில்வாகனம், வித்துவான் மு. சபாரத்தினம் ஆகியோர் பேசுவார்கள்.

# உபதேர்தல் முடிவுகள்

புதுடில்லி, ஜன. 15

மகாராஷ்டிரத்தில் நடைபெற்ற சட்டசபை உபதேர்தலில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ஏ. டி. காலா, குடியரசுக்கட்சி அபேட்சகரைத் தோற்கடித்தார். மத்திய பிரதேசத்தில் நடைபெற்ற மற்ளுேர் உபதேர்தலில் ஜனசங்கக் கட்சியைச்சேர்ந்த கிஷோர் சங், காங்கிரஸ் அபேட்சகரைத் தோற்கடித்தார்.

# காரியாதிகாரிக்கு பிரிவுபசாரம்

கொடிகாமம், புதன்

"தென்மராட்சிப் பகுதியில் இசைக்கலை வளரவும், கலா ரஸிகர்கள் உருவாகும், இப்பகுதி இசை மன்றங்கள் ஆற்றிவரும் கலைத்தொண்டு மிகவும் பாராட்டத் தக்கது. இப்பகுதியில் காரியாதிகாரியாக வந்ததன் பயனாக இசைக் கலையை நன்கு ரஸிக்கத் தெரிந்து கொண்டேன். நான் எங்கிருந்தாலும் இப்பகுதி மக்கள் செய்யும் இசைக் கலைத் தொண்டுக்கு ஏற்ற ஆக்கபூர்வ செய்ய ஆயத்தமாக இருக்கிறேன்."

மீசாலை இசைமன்றம், கிராம முன்னேற்றசங்கம், பலநோக்கு கூட்டுறவு சங்கம ஆகியவை சேர்ந்தளித்த பிரிவுபசாரத்திற்கு நன்றி கூறிய முன்னாள் தென்மராட்சி காரியாதிகாரி திரு. சிவஞானம் மேற்கண்டவாறு கூறினர்.

பிரம்மஸ்ரீ கா. சிவசுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் கிராம முன்னேற்ற சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. சு. கனகரத்தினம், திரு கே. சதாசிவம் சங்கீத பூஷணம் கே. குமாரசாமி, திரு. கே. ஏரம்பமூர்த்தி, சங்கீத பூஷணம் சி. விஜயசித்தம்பி ஆகியோர் பேசினர்கள்.

# பிரிட்டிஷ் பிரதமர் அமெரிக்க விஜயம்

லண்டன், ஜன. 15

அடுத்த மாதம் அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக, பிரிட்டிஷ் பிரதமர் சேர் அலெக்டக்ளஸ் ஹியூம் வாஷிங்டனுக்குச் செல்வார். வாஷிங்டன் கூட்டங்கள் பெப்ரவரி மாதம் 13ம் திகதி நடைபெறும். பிரிட்டிஷ் பிரதமருடன் வெளிநாட்டு மந்திரி திரு. ஆர். ஏ. பட்லரும் செல்வார். பிரதமர் பெப்ரவரி மாதம் 10ம் திகதி ஒட்டாவா நகருக்குச் செல்வார். அடுத்த நாள் கனடாப் பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸனுடன் பேச்சுவார்த்தைகள் நிகழ்த்துவார். பெப்ரவரி மாதம் 12ம் திகதி பிரிட்டிஷ் பிரதமர் விமான மூலம் வாஷிங்டனுக்குச் செல்வார்.

# "ஆங்கிலத்தில் புகையிரத வாரண்ட் வழங்குக"

## நிதிமந்திரிக்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் மகஜர்

கொழும்பு, புதன்

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களத்தில் புகையிரத 'வாரண்ட்' கொடுப்பதை நிறுத்திவைக்குமாறும் அதற்குப் பதிலாக ஆங்கிலத்தில் வழங்குமாறும் இலாகாத் தலைவர்களுக்கு உத்தரவிடுமாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் நிதிமந்திரியைக் கேட்டுள்ளது.

தமது சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் ஆங்கில மூலமோ அல்லது தமிழ் மூலமோதான் சேவையில் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களுக்குத் தெரியாத பாஷையான சிங்களத்தில் மட்டும் புகையிரத 'வாரண்ட்' வழங்குவதால் அவர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகிறார்களெனவும் நிதிமந்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இந்த மகஜரில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க பொதுக்காரியதரிசி திரு. ஆர். பாலசுப்பிரமணியம் நிதிமந்திரிக்குஅனுப்பிவைத்துள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"ஒரு உத்தியோகத்தருக்கு விளங்காத மொழியில் 'வாரண்டை'க் கொடுத்தால் அதில் கூறப்பட்டிருக்கும் தகவல்கள் உதாரணமாக பிள்ளைகளின் பெயர், வயது முதலிய விபரங்கள் சரியானவையா என்று அறிந்து கொள்ளமுடியாது. பிழையாகவே இருந்தாலும் அதைப் பெற்றுக்கொண்டால் பிரயாணம் செய்யப்போகும் நேரத்தில் பிரயாணத்தை ஒத்திவைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. சிங்களத்தில் தேர்ச்சியடையாத காரணத்துக்காக ஓய்வுபெறுவதா இல்லையா என்பதை தீர்மானிக்கவிருக்கும் எமது சங்க உறுப்பினர்கள் ஓய்வுபெறும் வரையாவது தமக்கிருக்கும் சலுகைகளை அனுபவிக்க அனுமதிக்கப்படவேண்டும் என்பதே நமது கோரிக்கை. விடுதலையைக் களிப்பதற்கென புகையிரத வாரண்ட் கொடுக்கப்படுவது வழக்கம். அப்படியிருந்தும் உத்தியோகத்தர் தேர்ச்சி பெருத சிங்களத்தில் 'வாரண்டை'க் கொடுப்பதால் அவருக்கு வேண்டிய நேரத்தில் பிரயாணம் செய்ய முடியாமல்போகிறது. சிங்களத்தில் தேர்ச்சிய

(5-ம் பக்கம் பார்க்க)



## வானொலிநிகழ்ச்சிகள்
### வியாழன் 16-1-64
### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மலர், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட்,

இரவு 7-00 பேச்சு — 'நாடும் நாமும்', 7-15 நேயர் விருப்பம், 7-45 நாடகம் — 'தேவை ஒரு மாப்பிள்ளை, (ஜோவலன்பரஸ் எழுதியது), 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 கவிக்கோவை — ஓ. எஸ். நாராயணன், 9-30 இசைய முதம், 10-00 நிலைய ஒலிப் பதிவுகள்.

# செய்திச் சுருக்கம்

### களவாடப்பட்டது

வெள்ளவத்தை பொருள் வைப்பு நிலையம ஒன்றிலிருந்து 6,000 ரூபா பெறுமதியான தணிவகைகள் களவாடப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது பொருள் வைப்பு நிலையத்திலிருந்து ஐந்து பூட்டுகளை உடைத்தே கள்வர் துணிவகைகளை எடுத்துச் சென்றதாகப் பொலிஸார் நடாத்திய விசாரணையின் பின்னர் தெரியவந்தது.

### வேலைநிறுத்தம்

ஜேம்ஸ் பின்லேய்ஸ் ஸ்தாபனத்தில் வேலைநிறுத்தம் நடைபெறுகிறது. 1963-ம் ஆண்டு போனஸ் பணம் கொடுக்காததையிட்டே இவர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். இலங்கை வர்த்தக சங்கம் பொதுவேலைநிறுத்தம் நடத்துவதற்கு முன்னரே இந்த ஸ்தாபனத்தில் கடமையாற்றும் இவ. சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துவந்தனர். ஆனால் பொதுவேலைநிறுத்தம் தொடங்கியதும் தமது வேலைநிறுத்தத்தை நிறுதிய இவர்கள் மீண்டும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

### தாமதம்

சத்திர சிகிச்சைக்குப் பாவிக்கப்படும் கருவிகள் பழுதடைந்தால் அவற்றைத் திருத்துவதற்குப் பல நாட்கள் தாமதமாகிறதென்றும் இதனால் பல சத்திர சிகிச்சைகளைச் செய்ய முடியாமல் இருப்பதாகவும் கொழும்புப் பகுதியில் உள்ள டாக்டர்கள் புகார்செய்துள்ளனர்.

### யானை விரட்டல்

கந்தளாய்ப் பகுதியிலிருந்து யானைகளை விரட்டுவதற்கென கந்தளாய் சீனி கார்ப்பரேஷன் 25 ஊழியர்களைவேலைக்கமர்த்தியுள்ளது. வருடா வருடம் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான கரும்புச் செய்கையை அழித்து வருவதாலேயே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வனவிலங்கு இலாகாவே இந்த யானை விரட்டல் வேலைக்குப் பொறுப்பாகவுள்ளது. கந்தளாய்ப் பகுதியில் 25 தொடக்கம் 30 யானை வரையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

### வந்ததும் தலையிடி

நுவரெலியா மாநகரசபை முதல்வராக திரு கே. சிறில் பாபு தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவர் தனது பதவியேற்ற முதல் நாளிலேயே மாநகரசபையைச் சேர்ந்த சுமார் 12 நகரசுத்தித் தொழிலாளர் மேயருக்கு எதிராகச் சுலோக அட்டைகள் தாங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். தற்காலிகமாக வேலை செய்து வந்த இந்தத் தொழிலாளர்களை முன்னர் கமிஷனர் நிறுத்திவைத்திருந்தார். பின்னர் அப்போதைய மேயர் அவர்களை மீண்டும் வேலைக்கமர்த்த ஒழுங்குகள் செய்திருந்தார். ஆனால் புதிய மேயர் வந்ததும் மீண்டும் அவர்களை வேலையிலிருந்து நீக்க உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்தே ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இத்தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கமர்த்திக் கொள்வதாகப் புதிய மேயரும் வாக்குறுதியளித்துள்ளதாகத் தெரிகிறது.

### "ஆங்கிலத்தில் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டையாத காரணத்துக்காக 1965-ம் ஆண்டுக்கு மூன்று மாதகாலம் முன்னரோ அல்லது பின்னரோ ஓய்வு பெறவிருக்கும் எமது அங்கத்தவர்கள் விடுதலை வாரண்டுகளுக்கு விண்ணப்பிக்க அருகதையுடையவர்கள். எனவே அவர்களும் மனித உரிமைகளை அனுபவிக்கவும், அரசாங்க ஊழியர்களுக்குள்ள சலுகைகளை அனுபவிக்கவும் வழி செய்யும்வகையில் சசிங்கள த தில் தேர்ச்சி பெறாத தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு ஆங்கிலத்தில் புகையிரத வாரண்டுகளை வழங்குமாறு இலாகா தலைவர்களுக்கு உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்."





ரெமி பொரேட்டட் டல்கம் பவுடர்

ரெமி பவுடரைப் பாவித்திருக்கிறீர்களா? சிறந்த பவுடருக்கு இணையான இந்த உயர்ந்த பவுடர் - வெகு நியாயமான விலைகளில் கிடைக்கும். அதி உன்னத மூலப் பொருட்களினால் ஆக்கப்பட்ட ரெமி மிக லளிதமாக வாசனையூட்டப்பட்டுள்ளது. உங்கள் வியாபாரிகளிடத்தில் 2 சைஸ் டின்களில் கிடைக்கும்.

ஆவ்ரா அன் கம்பனி,
19, செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 7211, 7212

ப்ரீடம் மார்க் கற்பூரம்




கற்பூரம் வாங்கும்போது
'ப்ரீடம்' மார்க் கற்பூரம்
என்றே கேட்டு வாங்குங்கள்.
இது ஓர் சிறந்த தயாரிப்பு

தயாரிப்பாளர்கள்,
ப்ரீ லங்கா இன்டஸ்ட்ரீஸ்.
மினுவாங்கொட.

### அரைச்சலார்

உங்கள் அபிமான ஸ்ருடியோவுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள். ஸபாஸ் ஸ்ருடியோ 11, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1805

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

### தென்னங்காணி விற்பனவு

யாழ்ப்பாணம், பூநகரி வெட்டுக்காட்டில் 11 3/4 ஏக்கர் தென்னந்தோட்டம் விலைக்கு இருக்கிறது. விபரங்கள்: வழக்கறிஞர் ச. செல்வராசா, 25, சப்பல்வீதி,பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். 1879

### விற்பனைக்கு

கொழும்புத்துறை செட்டிய தெருவில் புதிய கல்வீட்டுடன் 2 பரப்புத் தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அழகரத்தினம், 130/1, பெரியதெரு, யாழ்ப்பாணம். 1880

உள்நாட்டுத் தயாரிப்புகளை விற்பனை செய்யவும் பிரசாரம் செய்யவும் ஆர்வமுள்ள வாலிபர்கள் மனுச்செய்க. அ. த. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 1876

### பெறுமதியுள்ள வீடும் வளவும் விற்பனைக்கு

சாவகச்சேரி சந்தைக்கு அருகாமையில், கண்டி ரோட்டில் புதிய வீட்டுடன் (6) ஆறுபரப்பு காணி விற்பனைக்குண்டு. M.M. அப்துல்கரீம்,90, முஸ்லிம் கொலிஜ்ரோட், யாழ்ப்பாணம். 1872

### TUITION

Private tuition by undergraduate in Chemistry, Physics, Botany, Zoology, Maths. for G. C. E. and lower forms. First subject Rs. 25/- additional subjects Rs. 5/- each. Contact 105, Arasady Road, Kandermadam, Jaffna. 1881

### சொனென் சையின் பற்றறிகள்

விற்பனைக்குப்பின் எமது சிறந்த சேவைகள் உங்கள் பற்றறிகளுக்குக் கிடைக்கும். விலை நிதானம்.

துரை அன்ட் கோ
23/3 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 1809

### பாடப் புத்தகங்கள்

1968-ம் ஆண்டுவரை அங்கீகாரம்பெற்ற திரு வே. சிவக்கொழுந்து கணிதங்கள் மற்றும் மனக்கணிதங்கள், சூழல், பூமிசாத்திர நூல்களை பின்வரும் ஸ்தாபனத்தில் தொகைக்கு ஆசிரியர்கள் கொமிஷனுடன் பெற்றுக்கொள்ளலாம். 'கலாபவனம்', வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1866

### திருமண அழைப்பு

நாகேந்திரன் — தம்பித்துரை

எமது புதல்வன் குலேந்திரனுக்கும் (குலேன்) திரு. தம்பித்துரை (கூட்டு ஜில்லா நீதிபதி) திருமதி தம்பித்துரை அவர்களது புத்திரி சிவஞானவல்லிக்கும் (ஞானுவ்) எதிர்வரும் 20-1-64 திங்கள் இரவு 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையே வரும் சுபவேளையில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு நண்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் சமூகந்தருமாறு கனிவுடன் அழைக்கின்றோம். (தனிப்பட்ட அழைப்புகள் இல்லை). இப்படிக்கு நாகேந்திரன் தம்பதிகள், 67, Brown Road, Jaffna. 1877

### தேவை

பத்திரிகை விநியோகம் செய்வதற்கு வயது 20க்கு கூடாமல் இருக்கும் வாலிபர்கள் தேவை. 5 மைல் தூரத்திற்குள் வசிப்பவராக இருந்தால் நலம். விரும்புவோர் நேரில் வரவும். யாழ். பீடா ஸ்ரோர்ஸ் 163, நாவலர்சந்தி, யாழ்ப்பாணம். அல்லது No 56, பழைய பஸ்ஸ்டான்ட், யாழ்ப்பாணம். 1882

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணநாதர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

### ஊர்காவற்றுறை பட்டினசபை
### கேள்வி விளம்பரம்

1964-ம் ஆண்டு தை மாதம் 25-ந் திகதி முற்பகல் 10-00 மணி வரை ஊர்காவற்றுறை பட்டினசபைத் தலைவரால் சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. சந்தைக்குள் 4 அறையுள்ள மலகூடம் அமைத்தல்.
2. இரண்டு அறை வாளி மலகூடம்.
3. சந்தைக்குள் 2 அடிகான் கட்டுதல்
4. கதிரேசன் கோவில் ரோட்டு திருத்தவேலை.
5. அயித்தாம்பலம் ரோட்டு திருத்தவேலை.

மேலதிக விபரங்கள் எதுவும் ஊர்காவற்றுறை பட்டின சபைத் தலைவரிடமாவது அல்லது அலுவலகத்திலாவது பெற்றுக்கொள்ளலாம்.

க. சிதம்பரப்பிள்ளை
1757 தலைவர்

### தேவை

பனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு மனேச்சரும், ஒரு விற்பனவுகாரரும் தேவை. கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் காரியதரிசி, பனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பனை என்ற விலாசத்திற்கு 22-1-64 திகதிக்கு முன் மனுச்செய்யவும்.

1. சம்பளம்- மனேச்சருக்கு எல்லாம் உட்பட மாசம் 100/- ரூபாவும், விற்பனவுகாரனுக்கு எல்லாம் உட்பட மாசம் 75/- ரூபாவும் வருடா வருடம் திறமைக் கேற்ப சம்பள உயர்ச்சியும் கொடுக்கப்படும்.
2. மனேச்சர் ரொக்கப் பிணை ரூபா 1000/- உறுதிப் பிணை ரூபா 3000/-
விற்பனவுகாரர் ரொக்கப் பிணை ரூபா 500/- உறுதிப் பிணை ரூபா 1000/-
3. சி. த. ப. பரீட்சை எடுத்தவராகவும் 22 வயதுக்கும் 40 வயதுக்கும் உட்பட்டவராகம் இருக்கவேண்டும். கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றவராக இருப்பின் விரும்பத்தக்கது.
4. சமீபத்திய இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

செ. பொன்னையா,
1759 காரியதரிசி.

### மனேச்சர் தேவை

நெடுங்கேணி ப. நோ. கூ. சங்கத்திற்கு ஒரு மனேச்சருக்காகிய விண்ணப்பம்24-1-64க்கு முன் ஏற்றுக்கொள்ளப்படும். இதைப் பற்றிய முழு விபரத்தையும் எமது கந்தோரில் பார்வையிடலாம். ரொக்கப் பிணை ரூ 1000-00 ஆதனப் பிணை ரூ. 5000-00 சம்பளம்: கூட்டுறவுப் பயிற்சியில் சித்தியடைந்தவருக்கு ரூபா 150-00 மற்றையோருக்கு ரூபா 125-00. விண்ணப்பங்கள் யாவும் கடிதமேல்உறையில் "மனேச்சருக்காகிய விண்ணப்பம்" என எழுதி பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

கௌரவகாரியதரிசி,
நெடுங்கேணி
ப. நோ. கூ. சங்கம்
நெடுங்கேணி.
நெடுங்கேணி க. கந்தையா
11-1-64 கௌரவ காரியதரிசி
1758

வரி விளம்பரம்

### தேவை

கோண்டாவில் மஞ்சத்தடி ஐக்கிய பண்டகசாலை (இணுவில்)க்கு ஓர் உதவி விற்பனையாளர் தேவை. தகைமைகள்: J. S. C தராதரத்துடன் வியாபார அனுபவமும், (கூட்டுறவுப் பயிற்சியுடையோர் விரும்பத்தக்கது) வயது 18-25. காசுப் பிணை ரூபா 250-00. சம்பளம் ரூபா 55-00 மட்டும். 25-1-64 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
1878 கௌரவ காரியதரிசி

# படித்த சிறுபான்மை தமிழ் வாலிபருக்கு குடியேற்ற திட்டம்

## மக்கள் முன்னேற்ற மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

சிறுபான்மைச் சமூகத்திலுள்ள படித்த வாலிபர்களுக்கு விசேஷமாக ஒரு குடியேற்றத் திட்டத்தைக் கொடுக்கவேண்டுமென்று காணியமைச்சரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானம் மக்கள் முன்னேற்ற மன்றத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. இக் கூட்டத்திற்கு தலைவர் திரு. யே. ஞானப்பிரகாசம் தலைமைவகித்தார்.

முன்னாள் செனட்டர் திரு. ஜி. நல்லையா பேசும்போது, கட்சி பேதமின்றி தூரதிருஷ்டியுடன் மன்றம் நேர்மையான வழியிலே சிறுபான்மைத் தமிழர்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வருவதாகவும், அங்கத்தவர்கள் அனைவரும் சமூக முன்னேற்றத்துக்கும் சிறப்பாக சமத்துவம் நிலவுவதற்கும் பாடுபட வேண்டுமென்றும் கூறினர். இணைச் செயலாளர் திரு. கே. நடராசா பேசுகையில் கண்ணியமும், நேர்மையும் நிறைந்த பலர் எமது மன்றத்துடன் ஒத்துழைப்பது எமது சமூகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதாகக் கூறினர்.

கீழ் வரும் தீர்மானங்களும் இக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது:

கலால் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட பொறுக்குக் கமிட்டியில் 17-1-64இல சாட்சியமளிப்பதற்கு மேற்படி கமிட்டியால் மன்றத்திற்கு அழைப்பு விடப்பட்டதைத் தொடர்ந்து திருவாளர்கள் ஜி. நல்லையா, வி. யே. பிரான்சிஸ், எம். நடேசு, க. நடராசா, யே. ஞானப்பிரகாசம் ஆகியோரைக் கொண்ட குழு சாட்சியமளிப்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்டது. உள்நாட்டு அமைச்சருக்கு மன்றம் முன்னர் அனுப்பியிருந்த மகஜரில், வடமாகாணத்திலுள்ளது போல வவனியா, மன்னர் மாவட்டங்களிலும் மரவரி முறையை அமுலாக்கும்படிகேட்டிருந்தது.

மன்றத்துக்காக வடமாகாண வித்தியாதிபதிக்குச் சிபார்சு செய்து அனுப்பப்பட்ட சிறுபான்மைத்தமிழர் சமூக ஆசிரியர்களின் மாற்றத்தை 1-2-64க்கு முன் அமுலாக்கும்படியும், சிறுபான்மைத் தமிழர்சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர்களில் தகுதியானவர்களுக்கு, பதவியுயர்வு வழங்கி சமூகப் பிள்ளைகள் கூடுதலாகப் படிக்கும் பாடசாலைகளில் அவர்களையே தலைமை ஆசிரியர்களாக நியமிப்பதற்கும், இதுசம்பந்தமாக வடமாகாண உதவி வித்தியாதிபதியை இவ்வாரம் பேட்டிகாணவேண்டும்

ஆலயப் பிரவேசம் இத்தருணத்தில் அவசியமானதென்றும், இது சம்பந்தமான ஒழுங்குகளைச் செய்வதற்கு ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டதோடு விரைவில் செயலில் இறங்கவேண்டும்.


# இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) ரீகல் (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) நவா (கொம்பனித்தெரு)

கல்யாணி (நாவலப்பிட்டியா) ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (ஹட்டன்)

விஜயா (மட்டக்களப்பு) ஜெமினி (குருநாகலை)

வியப்பு, திகைப்பு, விறுவிறுப்பு, வெள்ளமெனத் துள்ளிவரும் இசையமைப்பு!

உங்களை மகிழ்விக்கும் அற்புதப் படைப்பு!

உணர்ச்சிக் கோர்வையிலே உருவான உன்னத குடும்பச் சித்திரம்!!



எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜா தேவி

எஸ். வி. சுப்பையா - எம். என். நம்பியார்

எம். வி. ராஜம்மா - நாகேஷ்- அசோகன்

மற்றும் பலர் திறம்பட நடித்த

சரவணா பிலிம்ஸ்

# பணத் தோட்டம்

இசையமைப்பு: விஸ்வநாதன் - ராமமூர்த்தி

தயாரிப்பு: ஜி. என். வேலுமணி

டைரக்ஷன்: கே. சங்கர்

மனோஹரா (யாழ்ப்பாணம்)

ஜெமினி கணேசன்— சரோஜாதேவி நடித்த

கல்யாணப்பரிசு


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இ. போ. ச. சாரதிகள்

கொழும்பு, புதன்

200 பஸ்கள் ஓடுவதற்கு தகுதியுடையனவாக இருந்தாலும் அவைத் செலுத்துவதற்கு தகுந்த சாரதிகள இல்லாதது பற்றி மந்திரிக்குத் தெரியுமா என எட்டியாந்தோட்டை எம். பி. டாக்டர் என். எம். பெரேரா அடுத்த மாதம் 20-ம் திகதி சபை கூடும்பொழுது போக்குவரத்து மந்திரி திரு. மகநம சமாவீராவிடம் கேட்பார்.

இப்பதவிகளுக்கு சாரதிகளை தேர்ந்தெடுப்பதற்காக விண்ணப்பம் கோரப்பட்டு திறமையின் அடிப்படையில் மாத்திரம் சாரதிகளை தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் மந்திரி தலையிட்டு அதை நிறுத்தி அரசாங்க கட்சி எம் பி.க்களின் தொகுதியிலிருந்து சாரதிகளை தெரிந்தெடுக்க வேண்டும் எனக் கூறியது பற்றியும், அதைச் சபையினர் ஆட்சேபித்தது பற்றியும் திரு. பெரேரா கேட்பார். இதை நிறுத்தி திறமையின் அடிப்படையில் சாரதிகளை தெரிவு செய்யுமாறும் அவர் மந்திரியைக் கேட்டுக் கொள்வார்.

## யோகாசனப் பயிற்சி

கொழும்பு, புதன்

திவ்ய ஜீவன சங்கக் கொழும்புக் கிளையின் ஆதரவில் இம்மாதம் 9-ம் திகதியும் 1-ம் திகதியும் கொச்சிககடைச் தம்பையா சத்திரத்தில் நோர்வேயைச் சேர்ந்த திரு. பேர் விந்தரால் யோக பிரசாரக் கூட்டமும் யோச வகுப்பும் நடாத்தப்பட்டது. கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று திரு. போ விந்தர் வெள்ளவத்தை வைசவமங்கையர் கழக சிவானந்த நிலையத்தில் ஆசனங்களைச் செய்து காட்டி அவற்றை விளக்கிக் கூறினர். இமயமலைச் சாரலில் உள்ள றிசிகேஸ் சம்பந்தமான படக் காட்சியும் நடைபெற்றது. இக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய டாக்டர் நல்லைநாதன் திவ்ய ஜீவன சங்கத்தின் ஆதரவில் ஒரு பொற்கிழியை அவருக்கு வழங்கினர். கொழும்பில் இருந்து கண்டிக்குச் செல்லும் திரு. பேர் விந்தர் இம்மாதம் 17-ந் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வார்.

## ஆங்கிலக் கால்வாயை நீந்த ஆனந்தன் முயற்சி

கொழும்பு, புதன்

இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் ஆங்கிலக் கால்வாயை நீந்திப் புதியதோர் சாதனையை ஏற்படுத்தப் போவதாகப் பாக்கு நீரிணையை நீந்திய திரு. ஆனந்தன் தெரிவித்துள்ளார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் எல். எல் பி வகுப்பில் இறுதி ஆண்டில் கல்வி பயிலும் அவர் தமது தேர்வு முடிந்தவுடன் இம்முயற்சியில் ஈடுபடுவார். மலைகளில ஏறுவதிலும் விருப்பமுடைய திரு ஆனந்தன் தற்பொழுது கண்டியில் உள்ள மலைகளில் நைலோன் கயிறுகளின் துணைகொண்டு செங்குத்தாக ஏறும் பயிற்சியைப் பெறுகிறர். திரு. ஆனந்தன் சுவிட்ஸலாந்துக்குச் சென்று அல்ப்ஸ் மலையிலும் ஏற முயற்சி செய்வாராம். தாம் முதலில் இங்கிலாந்துக்குச் சென்று அங்குள்ள சுவாத்தியத்துக்கு ஏற்பத் தம்மை அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## திறப்பு விழா

மயிலிட்டி, புதன்

மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலைத் திறப்பு விழா வருகிற 18-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும். இளைப்பாறிய உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் தலைமை வகிப்பார்.

# களனி ஆற்றுக்கு நால்வர் பலி!

கொழும்பு, புதன்

நேற்றுக்காலை களனிநதியில் குதித்து இருபெண்கள் நீரில் மூழ்கி மரணமானர்கள். இவர்களைக் காப்பாற்றுவதற்காக ஆற்றில் குதித்த ஒரு ஆடவரும் மரணமானர். களனிப்பாலத்திலிருந்து இந்த இருபெண்களும் களனிநதியில் குதித்தார்கள் எனவும் பலநிமிஷ நேரங்களின் பின்னர் இவர்களைக் காப்பாற்றுவதற்கு ஆற்றில் குதித்த ஒரு ஆடவரும் மரணமானர் எனவும் கூறப்படுகிறது. இதே இடத்திலிருந்து 50 யார் தூரத்தில் இன்னெரு இளம்பெண் தவறுதலாக ஆற்றில் விழுந்து மரணமானர்.

இச்சமபவத்தை நேரில் கண்டதாகக் கூறும் திரு. எம். சிறிசேன சில்வா தெரிவித்ததாகக் கூறப்படுவதாவது:

நேற்று அதிகாலை நான் களனிப்பாலத்தால் போய்க்கொண்டிருக்கும்போது இவ்விரு பெண்களையும் பாலத்தின் நடைபாதையில் அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்தனர். இருவரும் அழகாக உடுத்தியிருந்தார்கள். நான் திரும்பிவரும்போது அவர்கள் பாலத்திலேயே அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்தனர். சந்தேகத்துடனே நான் 'ஏன் இங்கிருக்கிறீர்கள்' என்று கேட்டதற்கு என்னை பயப்பட வேண்டாம் என்றும் தாம் ஆற்றில் குதிக்கமாட்டார்களென்றும் கிருண்ட்பாஸ் மரக்கறி வாங்கப்போன தனது கணவனைப் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் ஒரு பெண்மணி கூறினர். பாலத்தைக் கடந்ததும்யாரோ ஆற்றில் குதிக்கப்போகும் சத்தம் கேட்டது திரும்பிப்பார்க்கையில் இருபெண்களும்பாலத்தின் ஒருபகுதியில் தொங்கிக் கொண்டிருந்தனர். யாரும் அவர்களுக்கிட்ட போவதற்கு முன்னர் அவர்கள் ஆற்றில் குதித்துவிட்டனர். இருவரும் ஒருவரைஒருவர் பிடித்துக் கொண்டே குதித்தார்கள். நான் நீந்தமாட்டேன்; எனவே சத்தமிட்டேன். ஒருவரும் உதவிக்கு வரவில்லை. சில நிமிஷநேரம் கழித்து எனது கூக்குரலைக் கேட்டு ஒருவர் ஓடிவந்து ஆற்றில் குதித்தார். தான் நல்லாக நீந்துவர் எனவும் களியோடுவார் எனவும் அவர் ஆற்றில் குதிக்க முன்னர் தெரிவித்தார். ஆனல் அவரும் நீரில் மூழ்கி விட்டார். பின்னர் அங்கு மீன் பிடித்துக் கொண்டிருந்த லயனல் ஆற்றில் குதித்து பெண்களைக் காப்பதற்குச் சென்றவரின் உடலை எடுத்துவந்தார்.

விக்ரோறியா பாலத்திலிருந்து குதித்த இந்த இரு பெண்களில் ஒருவர் கர்ப்பவதியென்றும் மற்றவர் மாணவ ஆசிரியப் பரீட்சையில்தோல்வியடைந்தவர் எனவும் கூறப்படுகிறது. எ. பி. பிரேமாவதி, எஸ். பி சீர்யவதி ஆகிய இருவரும் கடவத்தையைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் இருவரும் மைத்துனிகள் எனவும் கூறப்படுகிறது. இருவரும் திட்டமிட்டே ஆற்றில் குதித்துத் தற்கொலை செய்துகொண்டார்கள் எனக் கூறப்படுகிறது.

நேற்றைய தினம் களனிநதியின் இன்னெரு பகுதியில் இன்னெரு இளம்பெண் தவறுதலாக ஆற்றில் விழுந்து மரணமானர். தைப்பொங்கல் தினமாகிய நேற்று 4 பேர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளனர். புதுவருட தினத்தன்று பொல்கொடஏரியில் 7 பேர் மரணமானர்கள்.

## இடமாற்றம்

மன்னர், புதன்

மன்னர்ப் பகுதியிலுள்ள உணவு கட்டுப்பாட்டு இலாகாவில் விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. ரி. சுப்பிரமணியம் திருகோணமலைப் பகுதிக்கும், திருகோணமலை விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் திரு. மரைக்கார் மன்னர்ப் பகுதிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மன்னர் உணவு விநியோக நிலையத்தில் பிரதம பொறுப்பாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். ஆர். ஜேம்ஸ் கொழும்புக்கும், அவரின் இடத்திற்கு திரு. கணேசனும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## யாழ். மாநகரசபை..:

(1-ம் பக்க தொடர்ச்சி)

வழங்கப்படவேண்டுமெனக் கோரும் பிரேரணையொன்றை திரு நா. த. செல்லத்துரை அடுத்து கொண்டுவருவார்.

திரு ஜே. எஸ். அழகையா கீழ்காணும் பிரேரணையைப் பிரேரிப்பார்:-

"கற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண) பரீட்சையின்போது யாழ்ப்பாணப் பரீட்சை ஸ்தானங்களில் ஒன்றில் தமிழ் பாஷைக்குரிய கேள்விப்பத்திரங்களை வழங்குவதற்கு மாருக, தமிழ் இலக்கியத்திற்கான கேள்விப் பத்திரங்கள் வழங்கப்பட்டதாகவும் பின்னர் தமது தவறை உணர்ந்து கொண்ட பரீட்சாதிகாரி வழங்கப்பட்ட இலக்கிய கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு தமிழ்ப்பாஷைக்கான கேள்விபத்திரங்களை பரீட்சார்த்திகளுக்கு வழங்கியதாகவும் அறியப்படுகிறது பரீட்சாதிகாரியின் தடுமாற்றத்துக்கு கேள்விப் பத்திரப் பொதிகளில் எழுதப்பட்டிருந்த உத்தியோக மொழி ஏற்படுத்திய மயக்கமே காரணமென்றும் கூறப்படுகிறது. ஆகவே நூற்றுக்கு நூறு தமிழ் பேசுவோர வதியும் பகுதிகளில், தாமே சரிவர அறிந்திராத உத்தியோக மொழியைப் புகுத்தும்படி தமிழ் அரசாங்க ஊழியர்களை நிர்ப்பந்திப்பதன் மூலம் அரசாங்கத்தால் நடாத்தப்படும் பொதுப் பரீட்சைகளைக் கேலிக்கிடமாக்கவேண்டாமென்று இச்சபை கௌரவ கல்வியமைச்சரையும், கௌரவ பிரதம மந்திரியையும் கேட்டுக் கொள்கிறது."

புதிய விஸ்தரிப்பை உள்ளடக்கிய அச்சுக்கூட வீதியை வண. பிதா ஐ. எம். எப். லோங் வீதி என்று பெயரிடவேண்டுமென்ற பிரேரணையையும், கிட்டங்கி வீதியை மேற்றிராணியார் எமிலியானுஸ் பிள்ளை வீதி என்று பெயரிடவேண்டுமென்ற பிரேரணையையும் திரு. பி. எஸ். சேவியர் கொண்டுவருவார்.

"நீச்சல் குளம் ஒன்றினை அமைப்பதற்கு உடன் நடவடிக்கை எடுப்பதெனவும், இத்திட்டத்தை தொடரும் பொருட்டுச் சபையில் ஒரு உப குழுவை நியமிப்பதெனவும் சபை தீர்மானிக்கிற"தென்ற பிரேரணையையும், "போக்கு வரத்து ஆலோசகர் குழுவொன்றை நியமிப்பதென இச்சபை தீர்மானிக்கிற"தென்ற பிரேரணையையும் திரு. ஏ. டி. துரையப்பா கொண்டு வருவார்.

(மாநகர அங்கத்தவர் 15 பேரையும், பொதுமக்கள் 15 பேரையும்) அங்கத்தவர்களாகக்கொண்ட 30 பேர் அடங்கிய பொதுசன நூல் நிலயக்குழுவின் அங்கத்தவர் தொகையை (மாநகர அங்கத்தவர் 17 பேரையும் பொதுமக்கள் 17 பேரையும் உள்ளடக்கிய 34 அங்கத்தர்களாக உயர்த்துவதுபற்றியும், பொதுமக்களை இதற்கு நியமிப்பதையிட்டும் சபை ஆலோசனை செய்யும்